# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:36** **தேதி:02.05.2015**

## DOT செயலருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தை

அன்பார்ந்த தோழர்களே,

நமது வரலாற்று சிறப்பு மிக்க ஏப்ரல் 21 மற்றும் 22 இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்திற்கு பின், அந்த வேலை நிறுத்தத்தில் கலந்துக் கொண்ட சங்கங்களின் தலைவர்களை DOT செயலாளர் 01.05.2015 அன்று பேச்சு வார்த்தைக்கு அழைத்திருந்தார். அதன் அடிப்படையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் BSNL ஊழியர் சங்கத்தின் சார்பில் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் கலந்து கொண்டார். தொலை தொடர்பு துறை சார்பாக திரு ராகேஷ் கார்க் SECRETARY DOT, செல்வி ரீடா டியோடியா SPECIAL SECRETARY DOT, திரு உமா சங்கர் JOINT SECRETARY DOT, செல்வி அன்னி மோரஸ் MEMBER(FINANCE), மற்றும் திரு N.K.குப்தா MEMBER(SERVICES) ஆகியோரும், BSNL நிர்வாகத்தின் சார்பில் திரு அனுபம் ஸ்ரீவத்சவா CMD BSNL, செல்வி சுஜாதா ரே ED (FINANCE) மற்றும் திரு ஷமீம் அக்தர் SR. GM (SR) ஆகியோரும் கலந்து கொண்டனர். நமது இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் அரசாங்கத்திடம் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை இந்த பேச்சு வார்த்தை வெளிக்காட்டியது. நடைபெற்ற பேச்சு வார்த்தையின் விவரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

1) BWA ஸ்பெக்ட்ரம் கட்டணம் 6,700 கோடி ரூபாய்கள் திருப்பித் தருவதிலும், USO நிதியத்திலிருந்து தருவதாக கூறிய 1,250 கோடி ரூபாய்கள் தருவதிலும் உள்ள பலத்த காலதாமதத்தின் மீது நமது ஆழ்ந்த வருத்தத்தை நமது தலைவர்கள் தெரிவித்தனர். DOT செயலாளர் பதிலளிக்கையில், BWA ஸ்பெக்ட்ரம் கட்டணம் திருப்பித்தரும் பிரச்சனையில் நமது மத்திய தொலைதொடர்பு அமைச்சரே, நிதி அமைச்சருடன் பேசியுள்ளதாகவும், அது விரைவில் பட்டுவாடா ஆவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்தார். அதே போல USO நிதியத்திலிருந்து வரவேண்டிய பணத்தையும் விரைவில் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் உறுதி அளித்தார்.

2) BSNL உருவான இந்த 14 வருடங்களுக்குமான BSNLன் கணக்குகளை DOT சரி பார்த்து ஒப்புதல் (RECONCILIATION) தராததும் BSNLன் பொருளாதார ஸ்திரத்தன்மையோடு இணைந்துள்ள மற்றொரு முக்கியமான அம்சம். இதன் காரணமாக DOTக்கு BSNL

வழங்கிய ஸ்பெக்ட்ரம் கட்டணங்கள் உள்ளிட்ட DOTக்கு செய்யப்பட்ட பட்டுவாடாக்கள் உட்பட அனைத்தின் மீதும் வருமான வரி விதிக்கப்பட்டது. இதன் காரணமாக 7000 கோடி ரூபாய்க்கு மேல் அதிக வருமான வரியை BSNL நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளது. இந்த பிரச்சனையில் வருமான வரி மேல்முறையீட்டு ஆணையத்திடம் நிர்வாகம் முறையிட்டுள்ளது. BSNLன் கணக்குகளை DOT சரி பார்த்து ஒப்புதல் (RECONCILIATION) தந்தால் இந்த 7000 கோடி ரூபாய் BSNLக்கு திரும்ப கிடைக்கும். இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு முடிக்க DOT-ஐ தலைவர்கள் வற்புறுத்தினர்.. இந்த பிரச்சனை சமீபத்தில் தான் தனது கவனத்திற்கு வந்துள்ளது என்று கூறிய DOT செயலாளர், மே மாத இறுதிக்குள் அது முடிக்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.

3) ஓய்வூதிய பங்கீட்டில் (PENSION CONTRIBUTION) BSNLஇடம் இருந்து அரசாங்கம் அதிக பணத்தை பிடுங்குவதில் தமது கடும் எதிர்ப்பினை தலைவர்கள் தெரிவித்தனர். அனைத்து மத்திய அரசு ஊழியர்களுக்கும் ஓய்வூதிய பங்கீடு என்பது அடிப்படை சம்பளத்தில் தான் கணக்கிடப்படுகிறது. ஆனால் BSNL ஊழியர்கள் பிரச்சனையில் அது ஊதிய விகிதத்தின் உயர்ந்த பட்ச அளவில் கணக்கிடப்படுகிறது. இதனால் BSNLஇடம் இருந்து வருடத்திற்கு 300 கோடி ரூபாய் என்ற அளவில் கடந்த எட்டு ஆண்டுகளாக அரசாங்கம் பறித்துள்ளது. கடந்த பல வருடங்களாக FORUM இதனை எடுத்துக் கூறி இருந்த போதும், DOT இதனை பற்றி கவலை படவில்லை. இந்த ரூ.2,400 கோடியை ரூபாய்களை உடனடியாக BSNLக்கு திருப்பித் தரவேண்டும் என தலைவர்கள் வற்புறுத்தினர். இந்த பிரச்சனையில் தலையிடுவதாக DOT செயலாளர் உறுதி அளித்தார்.

4) TERM CELLக்கு DEPUTE செய்யப்பட்டுள்ள BSNL ஊழியர்களுக்கு BSNL நிறுவனமே சம்பளம் வழங்கி வருகிறது. இப்படி வழங்கப்பட்ட ரூ.400 கோடியை பல நினைவூட்டல்களுக்கு பிறகும் DOT திருப்பித்தரவில்லை. தேவையான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என DOT செயலாளர் உறுதி அளித்துள்ளார்.

5) கருவிகளை பெறுவதற்கு BSNL வெளியிட்ட டெண்டர்கள் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டதால் 7 வருடங்களாக BSNLன் வலைத்தள விரிவாக்கத்தை அரசாங்கம் தடை செய்துள்ளதை தலைவர்கள் சுட்டிக்காட்டினார்கள். தொலை தொடர்பு அமைச்சரும் சமீபத்தில் இதனை உறுதி செய்துள்ளார். எனவே கருவிகள் வாங்குவதற்கும், வலைத்தளங்களை விரிவாக்குவதற்கும் தேவையான ரூ.10,000 கோடியை ரூபாய்களை அரசாங்கம் ஒரு சதவிகித வட்டியில் BSNLக்கு கடன் தரவேண்டும் என தலைவர்கள் கோரிக்கை வைத்தனர். ஆனால் இந்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

6) BSNLன் கிராமப்புற தரைவழி சேவைகளுக்கான நஷ்ட ஈடு பிரச்சனையில், BSNL நிறுவனம் கிராமப்புறங்களில் 28000 தொலைபேசி நிலையங்களை கொண்டுள்ளதாகவும், அதனால் BSNL நிறுவனத்திற்கு ஒவ்வொரு வருடமும் 10,000 கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது என தலைவர்கள் சுட்டிக் காட்டினார்கள். மேலும், கிராமப்புற தரைவழி சேவைகளுக்கான நஷ்டத்தை அரசாங்கம் BSNLக்கு ஈடுகட்டும் என 2000ஆம் வருடம் BSNL உருவாகும் போது அரசாங்கமே உறுதி அளித்துள்ளதையும் தலைவர்கள் சுட்டிக்காட்டினார்கள். USO நிதி மூலம் BSNLன் நஷ்டங்கள் ஈடுகட்டப்பட்டு வருவதாக DOT செயலாளர் பதிலளித்தார்.

7) ஓய்வூதியதாரர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு பிரச்சனையில், அமைச்சரவைக் குறிப்பை இன்னமும் DOT அனுப்பாததை நமது தலைவர்கள் கடும் எதிர்ப்புடன் சுட்டிக் காட்டியதுடன், தேவையில்லாமல் பலவருடங்களாக DOT காலதாமதம் செய்வதையும் சுட்டிக் காட்டினார்கள். DOTயின் காலதாமதத்தினால், ஓய்வூதியதாரர்கள் சிரமப்படுதையும் நமது தலைவர்கள் எடுத்துரைத்தனர். மேலும் காலதாமதமின்றி இது செய்து முடிக்கப்படும் என DOT செயலாளர் உறுதி அளித்துள்ளார்.

8) 2000ம் ஆண்டில் BSNLஆக மாறும் போது உறுதி அளிக்கப்பட்டிருந்த போதும், இதுவரை BSNLக்கு சொத்துக்கள் மாற்றித்தரவில்லை என நமது தலைவர்கள் தெரிவித்தனர். பல மாநிலங்களில் BSNLன் பல கட்டிடங்களை தன்னிஷ்டத்திற்கு DOT எடுத்துக் கொண்டுள்ளதையும் தலைவர்கள் தெரிவித்தனர். சொத்துக்கள் மாற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக DOT செயலர் உறுதி அளித்துள்ளார்.

9) BSNLல் ஓய்வு பெற்றவர்களுக்கு, வருங்கால ஓய்வூதிய மாற்றம் பிரச்சனையில் ஏழாவது ஊதியக் குழுவிற்கு பரிந்துரைக்க வேண்டும் என்று நமது தலைவர்கள் கோரினார்கள். ஏழாவது ஊதியக்குழுவின் வரம்பிற்குள் இந்த பிரச்சனை வராது என DOT செயலாளர் தெரிவித்தார். ஆனால் இந்த பிரச்சனை தீர்வு காண்பதற்கு பொருத்தமான மட்டத்திற்கு பரிந்துரைக்கப்படும் என DOT செயலர் உறுதி அளித்தார்.

நேரமின்மை காரணமாக இதர பிரச்சனைகள் விவாதிக்கப்படவில்லை. இது DOTயோடு மேலும் விவாதிக்கப்படும்.

**வாழ்த்துக்களுடன்,**

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**